SRI DURGADEVI DEVASTHANAM INC
Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724
www.sydneydurga.com

# சைவ சமய அறிவுப் போட்டி

## பாலர் பிரிவு

## (5 வயது முதல் 7 வயது வரை)

**மாதிரிக்கேள்விகள்**

| | | |
|---|---|---|
| 1 | உங்கள் சமயம் எது? | சைவ சமயம் |
| 2 | சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் யார்? | சிவபெருமான் |
| 3 | பூசைக்குத் தேவையான பொருள்கள் 5 கூறவும். | பூக்கள், பழங்கள், தேங்காய், கர்ப்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி, இளநீர் |
| 4 | நாம் உணவை உண்பதற்கு முன்னர் என்ன செய்யவேண்டும்? | இறைவனை நினைந்து நன்றி செலுத்தி வணங்கவேண்டும். |
| 5 | நாம் கடவுளை வணங்குவதற்குச் செல்லும் இடம் எது? | கோயில் |
| 6 | கோயிலுக்கு வேறொரு பெயர் கூறுக? | ஆலயம். |
| 7 | கோயில் வாசலில் நீர் காண்பது என்ன? | கோயில் கோபுரம் |
| 8 | தேர்த்திருவிழா ஒரு ஆண்டில் எத்தனை முறை நடைபெறும்? | ஒரு முறை |
| 9 | நாம் கோயில் சென்று கடவுளை வணங்குவதற்கு முன்பு யாரைத் தினமும் வீட்டில் வணங்கவேண்டும். | தாய், தந்தையரை வணங்கவேண்டும். |
| 10 | திருநீற்றை நிலத்தில் (தரையில்) போடலாமா? | திருநிற்றைத் தரையில் போடக்கூடாது. |
| 11 | திருநீற்றின் நிறம் என்ன? | திருநீற்றின் நிறம் வெள்ளை |
| 12 | சிட்னியில் துர்க்கை அம்மன் ஆலயம் எங்கே அமைந்துள்ளது? | இரீயன்ஸ் பார்க்கில் அமைந்துள்ளது. |
| 13 | பிள்ளையாரை எப்படி வணங்குகிறோம்? | நெற்றியில் 3 முறை குட்டி, தோப்புக்கரணம் போட்டு வணங்குவோம். |
| 14 | கோயிலுக்கு நாம் ஏன் போகிறோம்? | கடவுளை வணங்குவதற்குப் போகிறோம். |
| 15 | கோயில் உள்ளே நீங்கள் பார்க்கும் இரண்டு பொருள்களின் பெயர்களைக் கூறுக? | பூக்கள், பழங்கள், தேங்காய், திருநீறு (விபூதி), சந்தனம், குங்குமம். |
| 16 | கோயிலில் கடவுளை எப்படிக் கும்பிடவேண்டும்? | மனதில் இறைவனை நினைத்தபடி இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிடவேண்டும். |
| 17 | கோயிலில் பூசை முடிந்ததும் என்ன கொடுப்பார்கள்? | திருநீறு, தீர்த்தம், சந்தனம், குங்குமம், பிரசாதம் |
| 18 | திருநீறு - இதற்கு வேறு பெயர் ஒன்று கூறுக? | விபூதி |
| 19 | பிள்ளையாருக்கு எந்தப் புல்லினால் அருச்சனை செய்வார்கள்? | அறுகம் புல்லினால் அருச்சனை செய்வார்கள். |
| 20 | பிள்ளையாருக்குச் சாத்துவதற்கு உகந்த புல் எது? | அறுகம் புல் |
| 21 | உலகத்தைப் படைத்தவர் யார்? | கடவுள் |
| 22 | கடவுளுக்கு இன்னுமொரு பெயர் கூறுக? | இறைவன் |
| 23 | திருநீற்றை எப்படிப் பூசுவீர்? | சிவ சிவ என்று உச்சரித்துக் கடவுளை வணங்கியபடி திருநீற்றைப் பூசவேண்டும். |

| | | |
|---|---|---|
| | கோயில் எது? | |
| 25 | திருநீற்றை எங்கே பூசவேண்டும்? | திருநீற்றை நெற்றியிலே பூசவேண்டும். |
| 26 | சிவப்புத் தாமரைப் பூவில் இருக்கும் கடவுளின் பெயரைக் கூறுக? | இலக்குமி அம்மன் |
| 27 | சந்தனத்தின் நிறம் என்ன? | மஞ்சள் நிறம் |
| 28 | குங்குமத்தின் நிறம் என்ன? | சிவப்பு நிறம். |
| 29 | வேலைக் கையில் வைத்திருக்கும் கடவுளின் பெயரைக் கூறுக. | முருகப்பெருமான் - வேலாயுதன் - மயில்வாகனன் |
| 30 | மோதகத்தைக் கையில் வைத்திருக்கும் தெய்வத்தின் பெயரைக் கூறுக | பிள்ளையார் – கணபதி – ஐங்கரன் - |
| 31 | புலித்தோலை அணிந்த கடவுளின் பெயரைக் கூறுக. | சிவபெருமான் |
| 32 | கல்விச் செல்வத்தைத் தரும் தெய்வத்தின் பெயரைக் கூறுக. | சரசுவதி தேவி (சரஸ்வதி தேவி) |
| 33 | வெள்ளைத் தாமரைப் பூவில் இருக்கும் கடவுளின் பெயரைக் கூறுக. | சரசுவதி தேவி (சரஸ்வதி தேவி) |
| 34 | பிள்ளையாரின் தம்பி என்று எந்தக் கடவுளைக் கூறுவர். | முருகப் பெருமான் |
| 35 | முருகப்பெருமானின் கையில் என்ன ஆயுதம் உள்ளது? | வேலாயுதம் - வேல் - உள்ளது. |
| 36 | முருகப் பெருமானின் அண்ணனின் பெயரைக் கூறுக. | பிள்ளையார் |
| 37 | கோயிலில் நடைபெறும் ஒரு திருவிழாவின் பெயரைக் கூறுக. | (உ-ம்) தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா... |
| 38 | மூன்று வயதில் தேவாரம் பாடிய நாயனாரின் பெயர் என்ன? | திருஞானசம்பந்த நாயனார். |
| 39 | கோயிலுக்கு உள்ளே சென்றதும் முதலில் எந்தக் கடவுளை கும்பிடவேண்டும்? | முதலில் பிள்ளையாரைக் கும்பிட வேண்டும். |
| 40 | எந்தக் கடவுளுக்கு முதலில் பூசை செய்யவார்கள்? | பிள்ளையாருக்கு முதலில் பூசை செய்யவார்கள். |
| 41 | எந்தக் கடவுளுக்குக் கடைசியாக பூசை செய்யவார்கள்? | சண்டேசுவர (சண்டேஸ்வர) சுவாமிக்கு கடைசியாகப் பூசை செய்யவார்கள். |
| 42 | பிள்ளையாரின் வாகனம் எது? | ஏலி வாகனம் |
| 43 | பிள்ளையாருக்கு வேறு இரண்டு பெயர்களைக் கூறவும். | கணபதி, விநாயகர், ஐங்கரன், ஆனைமுகன், ஏகதந்தன், கரிமுகன், ஆகீசன், மதகரி, ஆகுவாகனன், மதங்கன் |
| 44 | யானை முகத்தைக் கொண்ட கடவுளை எப்படி அழைப்பீர்கள்? | ஆனைமுகன், கரிமுகன், பிள்ளையார் |
| 45 | முருகப் பெருமானின் கொடியில் உள்ள பறவை எது? | சேவல் |
| 46 | முருகப் பெருமானுக்கு வேறு பெயர்கள் கூறுக. | ஆறுமுகன், சேந்தன், சரவணபவன், கார்த்திகேயன், சுப்பிரமணியன், மயில்வாகனன், கந்தன், செவ்வேள், வடிவேலன், கடம்பன், அயிலவன், வேலாயுதன் |
| 47 | கோயிலுக்கு எப்படி நாம் செல்ல வேண்டும்? | குளித்துத் தூய ஆடை அணிந்து செல்லவேண்டும். |
| 48 | பெரியவர்கள் அல்லது குருக்கள் திருநீறு தரும்பொழுது எப்படி வாங்குவீர்கள்? | பெரியவர்களை வணங்கி இடக்கைமேல் வலக் கையை வைத்து பயபக்தியுடன் வலக்கையால் வாங்கவேண்டும். |
| 49 | கோயிலுக்குள் சென்றபின் நீங்கள் எப்படி இருப்பீர்கள்? நடந்துகொள்வீர்? | அமைதியாகவும் சத்தம் செய்யாமலும் இருக்க வேண்டும். |